# ★ பூநகரி ஊடாக உணவுப் பொருள்கள் வரும்?


விலை ரூபா 5.00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2024 சித்திரை 16 இதழ் 73
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 29 – 04 – 1993


(யாழ்ப்பாணம்)
சங்குப்பிட்டி - கேரதீவு பாதையூடாக அத்தியாவசிய உணவுப்பொருட்களை நாம் கொண்டு வரும் வாகனங்களை கண்காணிக்கும் பணியை பொறுப்பேற்பதற்கு அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் அதிகாரபூர்வமாக இணக்கம் தெரிவித்துள்ளது.
ஜெனிவாவிலுள்ள தூதரக தலைமையகம் இந்த முடிவை எடுத்திருப்பதாக, யாழ்ப்பாணத்திலுள்ள அகதிகளுக்கான ஐ. நா. தூதரக வதிவிடப் பிரதிநிதி திரு அசோக்குமார் தெரிவித்துள்ளார்.

(4ம் பக்கம் பார்க்க)

## கிளாலி பூநகரி படகுச்சேவை

(யாழ்ப்பாணம்)
கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வியாழக்கிழமை வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (சி)

## கிளாலி கடலில் நேற்று மோதல்

(எழுதுமட்டுவாள்)
கிளாலி கடல் பரப்பில் நேற்று மாலை 6-50 மணியளவில் பயணிகள் படகுகள் மீது கடற்படையினர் தாக்க முற்பட்டபோது புலிகளுக்கும், படையினருக்குமிடையில் சுமார் 10 நிமிடம் கடுமையான மோதல் இடம்பெற்றது.

(4-ம் பக்கம் பார்க்க)

## லலித்தின் இறுதிக்கிரியையில்

# கொழும்பில் பெரும் கலவரம்

# வன்முறை தீயிடல் துவக்குசூடு

## தலைநகரில் ஊரடங்கு

(கொழும்பு)
காலஞ்சென்ற லலித் அத்துலத்முதலியின் இறுதிக்கிரியைகள் நேற்று நடைபெற்றபோது கொழும்பில் பெரும் கலவரமும், வன்முறையும் வெடித்தது. பல இடங்களில் பொலிஸாரும் பொதுமக்களும் மோதிக்கொண்டனர். கல்வீச்சு, தடியடி, கண்ணீர் புகை வீச்சும், தீவைப்புகளும் இடம் பெற்றன. கலவரத்தை கட்டுப்படுத்த கொழும்பு நகரில் நேற்றிரவு ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்தப்பட்டது.

## வீதிகளில் $2\frac{1}{2}$ லட்சம் மக்கள்

திரு. அத்துலத் முதலியின் இறுதி ஊர்வலம் அவரது கொள்ளுப்பிட்டி பிளவர் ரோட் இல்லத்திலிருந்து மாலை 2-30 மணிக்கு ஆரம்பமானது. முதலில் அமைதியாகவே ஊர்வலம் இருந்தது. பிற்பாடு கோஷங்கள் எழுப்பப்பட்டன. வீதி நெடுகிலும் அக்கம் பக்க சுமார் இரண்டரை லட்சம் மக்கள் நின்றிருந்தனர். பெருந்தொகையான புத்த பிக்குகளும் பெண்களும், மாணவர்களும் இவ்வூர்வலத்தில் கலந்து கொண்டனர். கலகம் வெடிக்கும் என அஞ்சியும், துக்கம் அனுஷ்டித்தும் அதிகமான கடைகளும் வர்த்தக ஸ்தாபனங்களும் மூடப்பட்டு இருந்தன.

## அரசு எதிர்ப்பு கோஷங்கள்

லலித் அத்துலத்முதலியின் இறுதி ஊர்வலத்தில் சுமார் ஒரு லட்சம் பேர் வரை கலந்து கொண்டனர். இவர்கள் அரசுக்கும், ஜனாதிபதி பிரேமாவுக்கும் எதிராக கோஷங்களை எழுப்பிய வண்ணமும் லலித்தின் புகைப்படத்தை தாங்கிய வண்ணமும் சென்றனர். ஆர்ப்பாட்டகாரர் ஆவேசத்துடன் கோஷமிட்டுச் சென்றதாக பி. பி. ஸி தெரிவித்தது. பல இடங்களிலும் மக்களின் கோபக் கொந்தளிப்பை பொலிஸாரால் கட்டுப்படுத்த முடியாது போய்விட்டது.

## ஜீப், பஸ், வாகனம் தீக்கிரை

நேற்று நடைபெற்ற லலித்தின் இறுதி ஊர்வலத்தில் கலந்துகொண்டவர்களில் கோபாவேசம் கொண்ட நூற்றுக்கணக்கானோர் பொலிஸ் ஜீப் வண்டி ஒன்றையும் சில பஸ் வண்டிகள், கார்கள், அரசு வாகனங்களையும் தீயிட்டு கொளுத்தினர். கொளுத்தப்பட்ட வாகனங்கள் பலமணி நேரம் எரிந்து முற்றாக சாம்பலாயின. இவற்றைத் தடுக்க முனைந்த பொலிஸார் மீது ஆவேசம் கொண்ட மக்கள் கல்வீச்சினை நடாத்தியுள்ளனர்.

## 2 ஹெலிகள் கண்ணீர் புகைக்குண்டு வீச்சு

லலித்தின் இறுதி ஊர்வலத்தின் போதும், கனத்தை மயானத்தில் இடம்பெற்ற இறுதிச் சடங்கின் போதும் பெரும் கலவரம் வெடித்ததால் கலவரத்தைக் கட்டுப்படுத்தப் பொலிஸாரும், கடற்படையினரும் கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வெடிக்க வைத்தனர். இது இயலாது போகவே இரண்டு ஹெலிகொப்டரிலிருந்து பல மணி நேரம் கண்ணீர் புகைக் குண்டுகள் பரவலாக வீசப்பட்டன. ஹெலிகொப்டர் கண்ணீர் புகைக் குண்டுகளை வீசிய போது கலவரம் பெருமளவில் இடம்பெற்றுள்ளது.

## ரூபவாஹினியை தாக்க முயற்சி

நேற்று அலுவலக கட்டிடங்கள், அரசுக்கு சொந்தமான பத்திரிகை காரியாலயங்களுக்கு பலத்த பாதுகாப்பு போடப்பட்டது. சுமார் 2 ஆயிரம் பொலிசார் வரை தலைநகரில் குவிக்கப்பட்டிருந்தனர். ஊர்வலத்தில் கலந்து கொண்டோரில் பலர் திடீரென வானொலி நிலையம், ரூபவாஹினி தொலைக்காட்சி நிலையத்தையும் தாக்க முற்பட்டனர். ஆவேசத்துடன் தாக்க முற்பட்ட மக்கள் மீது, அங்கு காவலுக்கு நின்ற கடற்படையினர் கண்ணீர்புகை வீசி தடுத்து நிறுத்தினர்.

(4-ம் பக்கம் பார்க்க)

## கொலையாளி யார் பொலிஸார் திண்டாட்டம்

(கொழும்பு)
லலித் அத்துலத்முதலியைக் கொலை செய்தவர் யார் என்பது இன்னமும் திட்டவட்டமாகக் கண்டுபிடிக்கப்படவில்லையென்று பிரதிப் பொலிஸ் மாஅதிபர் நேற்றுத் தெரிவித்துள்ளார்.
முதலில் கொலையாளி மானிப்பாயைச் சேர்ந்த அப்பையா பாலகிருஷ்ணன் எனக் கூறிவந்த பொலிசார் அவரது சடலத்துக்கு அருகிலிருந்த அடையாள அட்டை போலியானதெனக் கண்டு பிடிக்கப்பட்டதையடுத்து மேற்கண்டவாறு கூறியுள்ளனர். (சு-கி)

## ★ பிரேமாவின் கொலைப் படையே லலித்தை கொன்றது

(கொழும்பு)
ஜனாதிபதி பிரேமாவின் "கொலைப் படையே" லலித்தை படுகொலை செய்ததாக ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி உபதலைவர் திரு. காமினி திஸநாயக்கா பகிரங்கமாக குற்றம் சாட்டியுள்ளார்.
இதே குற்றச்சாட்டையே சுதந்திரக்கட்சியும் பிரேமாவுக்கு எதிராக சுமத்தியுள்ளது.
இதேவேளை லலித்துடன் தமக்கு எதுவித விரோதமுமில்லை என்றும் தனது பெயரைக் கெடுக்க எதிர்க்கட்சிகள் முயல்வதாகவும் பிரேமதாஸா கண்டனம் தெரிவித்துள்ளார். (சி)

## லலித் கட்சிக்கு வெற்றி வாய்ப்பு குறைவு?

(கொழும்பு)
எதிர்வரும் மே மாதம் 17-ம் திகதி நடைபெறவுள்ள மாகாண சபைத் தேர்தலில் ஏழு மாகாணங்களில் மூன்று மாகாணங்களை ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி அல்லது எதிர்க்கட்சிக் கூட்டணி கைப்பற்றும் வாய்ப்பு முன்னர் இருந்தது.
ஆனால் லலித்தின் படுகொலையை அடுத்து இதை இனித் தீர்மானிக்க முடியாதுள்ளதாக அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளதாக ஏ. எப். பி' செய்தி கூறியுள்ளது. (கே-சி)

## ★ ஊர்வலத்தில் சென்றோர் அரசு எதிர்ப்பாளரா? லலித் ஆதரவாளரா?

(கொழும்பு)
லலித்தின் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்ட சுமார் இரண்டரை லட்சம் மக்களும் லலித்தின் ஆதரவாளர்களா? அல்லது அரசு எதிர்ப்பாளர்களா? என்பது தெரியவில்லை என அவதானிகள் கூறியதாக பி. பி. ஸி. 'சந்தேசிய' கூறியது.
ஊர்வலத்தில் சென்ற ஒரு லட்சம் பேரை விட பூதவுடல் திறந்த பேழையில் எடுத்துச் செல்லப்படுவதை பார்வையிட சுமார் இரண்டரைலட்சம் மக்கள் மூன்று மைல் தூரத்திற்கு வெள்ளைக் கொடிகளுடன் நின்றதாக செய்திகள் தெரிவிக்கின்றன. (சு-கி)

# வரி விளம்பரம்

### "நீம் தூபம்"

சுகவாழ்வுக்குக் காலை மாலை நீம் தூபம். இதமாக இயற்கை நறுமணம் கொண்டது. அண்ணா கோப்பிக் கடைகளிலும் விற்பனையாகிறது. "மிக்ஸ்வைற்" (எ-3092)

### தேவை

5KVஇற்கும் 10KVஇற்கும் இடையே வலு உடையதும் டீசலில் இயங்கக்கூடியதுமான ஜெனரேற்றர் தேவை. தொடர்பு: நளினி கிறைண்டிங் மில் 730 கே. கே. எஸ். றோட் யாழ்ப்பாணம். (சி-61)

கொச்சிக்கீஸ், வீவா, போத்தலைக் தேவை. றப்பர் மூடியுடன் கூடியது. Taste Line Industries (PVT) Ltd, No: 14, Seenier Lane, Jaffna. (A-3024)

சகல விதமான இனிப்புப் பண்டங்கள், 1. பலகாரவகைகள் தயாரிப்பதில் அனுபவமுள்ள சுவீற்ஸ் மேக்கர் தேவை. 2 அனுபவமுள்ள கைவேலையாள் தேவை. 3 அப்பம் தயாரிப்பதில் அனுபவமுள்ளவர் தேவை. சம்பளம் நேரில் பேசலாம். நம்; 324, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம், ரவி ஜோப்பி பாஸ். (எ- 3091)

### வியாபாரிகளுக்கு

தரமான இமிரேசன் கோல்ட் கவறிங் நகைகள், மணப்பெண் சோடனை நகைகள், லேஸ் நூல் வகைகள், சிறுவர் விளையாட்டுப் பொருட்கள் மற்றும் வெளிநாட்டு உள்நாட்டு அழகு சாதனப் பொருட்களை பெற்றுக்கொள்ள ஜெயா அழகுசாதன மாளிகை 177-A, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (எ 3042)

### வைத்தியம்

செங்கண்மாரி, குடற்புண், தெய்வு, வாதரோகங்கள், வலிப்புநோய், பீநிசம், தலையிடி, தலை காலவியல், சரும நோய்கள், மாதவிடாய்க் குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக்கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, வீரியக் குறைவு மூலவியாதிகள், மூத்திரரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்தியகலாநிதி இ. இராசரத்தினம் 121, 2-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (இ-7)

### மீண்டும் இயங்குகிறது

சோதிட விலாசபுத்தகசாலை 46, பெரியகடை, யாழ்ப்பாணம் சோதிட, வைத்திய, விஞ்ஞான புத்தகங்களும் பாடசாலைப்புத்தகங்களும், உபகரணங்களும் விற்பனையாகின்றன. ஸ்ரீமுக வருஷ இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கம் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். சோதிடப்பிரகாச அச்சியந்திரசாலை, கொக்குவில். (எ-3022)

### பயிற்சி வினாத்தாள்
(ஆண்டு 4, 5)

சிறந்த பெறுபேற்றை வருடாவருடம் பெற்றுத் தரும் நிறுவனத்தால் நடாத்தப்படும் ஆண்டு 5 புலமைப் பரிசில் முன்னோடிப் பரீட்சை வினாத்தாளும் ஆண்டு 4 பரீட்சை வினாத்தாளும் (தமிழ், கணிதம், ஆங்கிலம்) 02-05-93 ஞாயிறு வெளியிடப்படும். விடையளித்து தந்தால் திருத்திக் கொடுக்கப்படும். புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (இ-58)

### நோவு வைத்தியம்

ஒட்டகப்புலம் சமந்தரி நோவு எண்ணை கிடைக்குமிடம் எஸ். பி. மெடிக்கல்ஸ், 480, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி-28)

### வைத்திய சேவை

வாதரோகங்களா, சரும ரோகங்களா, தலைமயிர் உதிர்கின்றதா, அல்லது நரைக்கின்றதா, கழலைக்கட்டிகளா, முகப்பருக்களா நரம்புத்தளர்ச்சியா செய்வினை சூனியம் பிணிதோஷம் போன்றவற்றால் ஏற்பட்ட வியாதிகளுக்கும் மெஞ்ஞான ஆலோசனையுடன் நுண்ணியல் மருத்துவம் வேளாங்கண்ணி வைத்தியசாலை, டாக்டர் எம். கருணாகரன், 616, மானிப்பாய் வீதி, ஒட்டுமடம், யாழ்ப்பாணம். (இ-54)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
இலங்கை.

ஈராண்டுப் பகுதி
நேரப் பட்டப்பின்
கல்வித் தகைமை
கற்கைநெறி

## 1992|93

## புதிய அனுமதி

அரசாங்கப் பாடசாலைகளில் கடமையாற்றும் பட்டதாரி ஆசிரியர்களிடமிருந்து மேற்படி கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தெரிவு நாடிகள் 1993-05-31இல் 50 வயதுக்குக் குறைந்தவர்களாக இருத்தல் வேண்டும்.

இக்கற்கைநெறி தொடர்பான விண்ணப்பங்களைப் பெற விரும்புவோர் நிதிக்கிளையில் ரூபா 10/- செலுத்திப் பற்றுச்சீட்டினைக் கல்விக்கிளை, சிரேஷ்ட உதவிப் பதிவாளரிடம் சமர்ப்பித்துப் பெற்றுக்கொள்ளலாம்.

எழுத்துத் தேர்வொன்றிற்கும் அதன் பெறுபேற்றின் அடிப்படையில் நடாத்தப்படும் நேர்முகத் தேர்வொன்றிற்கும் தேர்வு நாடிகள் தோற்ற வேண்டும்.

அனுமதிப் பரீட்சை 1993-07-25 அன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இராமநாதன் மண்டபத்தில் நடைபெறும்.

தெரிவு செய்யப்படுவோர் 25 மைல் சுற்றுட்டில் அமைந்துள்ள பாடசாலைக்கு இடமாற்றம் பெறுவதோடு இக்கற்கை நெறிக்குப் பதிவு செய்யும் பொழுது இவ்விடமாற்றக் கடிதத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

விண்ணப்பங்களை சிரேஷ்ட உதவிப் பதிவாளர், கல்விக்கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என்னும் முகவரிக்கு 1993-05-31ஆம் திகதிக்கு முன் அனுப்புதல் வேண்டும்.

பதிவாளர்.
யாழ். பல்கலைக்கழகம்.

1993-04-27. (ஏ-3086)

## இன்று

(அரியாலை)

அரியாலை ஸ்ரீ ஞான வைரவர் கோவிலில் வருடாந்த அலங்கார உற்சவத்தையொட்டி இன்று 29ம் திகதி வியாழக்கிழமை பகல் 10 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனைகளும் மாலை 7 மணிக்கு வசந்த மண்டப பூசையும் அதனைத் தொடர்ந்து சுவாமி வீதி உலா வருதலும் நடைபெறவுள்ளது இவ்வலங்கார உற்சவம் எதிர்வரும் 3ந்திகதி திங்கட்கிழமை நிறைவுபெறுகிறது. (59)

★

(கொழும்புத்துறை)

பாஷையூர் மக்கள் முன்னேற்றச் சங்கம் சனசமூக நிலைய வாசகர் வட்டத் திறப்பு விழாவும், நிலைய ஸ்தாபகர்களைக் கௌரவித்தலும், நிலைய முன்றலில் இன்று 29ம் திகதி வியாழக்கிழமை பி.ப 3 30 மணிக்கு நிலையத் தலைவர் திரு. எஸ். கே. செபஸ்தியாம்பிள்ளை தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக விநாயகர் தருமநிதியம் நிறுவனர் "அறநெறிக் காவலர்" உயர் சைவத்திரு ஆ. சி. முருகுப்பிள்ளை பங்குபற்றிச் சிறப்பிக்கவுள்ளார். (154)

★

(யாழ்ப்பாணம்)

யாழ் வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலய 9ம் நாள் பூந்தண்டிகை விழா இன்று வியாழக்கிழமை மிகவும் சிறப்பாக நடைபெறவிருக்கிறது பிரபல்யமான மங்கள வாத்திய கலைஞர்கள் இதில் பங்கு பற்றி சிறப்பிக்க இருக்கிறார்கள்.

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்,
இலங்கை.

முழுநேரப்
பட்டப்பின்

கல்வித் தகைமை
கற்கைநெறி

## 1992—93

## புதிய அனுமதி

தனியார் பாடசாலைகளில் கடமையாற்றும் பட்டதாரி ஆசிரியர்களிடமிருந்து மேற்படி கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தேர்வு நாடிகள் 1993-05-31இல் 50 வயதுக்குக் குறைந்தவர்களாக இருத்தல் வேண்டும்.

இக்கற்கைநெறி தொடர்பான விண்ணப்பப் படிவங்களைப் பெற விரும்புவோர் நிதிக்கிளையில் ரூபா 10/- செலுத்திப் பற்றுச்சீட்டினைக் கல்விக்கிளையில் சிரேஷ்ட உதவிப் பதிவாளரிடம் சமர்ப்பித்துப் பெற்றுக்கொள்ளலாம்.

எழுத்துத் தேர்வொன்றிற்கும் அதன் பெறுபேற்றின் அடிப்படையில் நடாத்தப்படும் நேர்முகத் தேர்வொன்றிற்கும் தேர்வு நாடிகள் தோற்றவேண்டும்.

அனுமதிப் பரீட்சை 1993-07-25 அன்று பல்கலைக்கழக இராமநாதன் மண்டபத்தில் நடைபெறும்.

விண்ணப்பங்களை சிரேஷ்ட உதவிப் பதிவாளர், கல்விக்கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என்னும் முகவரிக்கு 1993-05-31ஆம் திகதிக்கு முன் அனுப்புதல் வேண்டும்.

பதிவாளர்,
யாழ். பல்கலைக்கழகம்.

1993-04-27. (ஏ-3087)

## மோட்டார் ஊர்திப்பதிவு

(யாழ்ப்பாணம்)

முதற்கட்ட மோட்டார் ஊர்திப் பதிவுகள் 08-05-93 உடன் முடிவடைகிறது என்பதை மோட்டார் ஊர்திப் பதிவுப் பகுதியினர் யாழ். உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு உட்பட்ட சகல மோட்டார் ஊர்தி உரிமையாளர்களுக்கும் அறியத்தருகின்றனர்.

சிறீலங்கா மோட்டார் ஊர்திப் பதிவு அல்லது இறக்குமதிச் சீட்டை உள்ளவர்கள் உடன் பதிவுகளை மேற்கொள்ளவும். (இ)

31-வது நாள்

## நன்றி செலுத்தும் ஆராதனை



திருமதி

### லில்லி பொன்னம்மா பொன்னு

தோற்றம்: 28-02-1914 மறைவு: 31-03-1993

நாளை 30-04-93 வெள்ளிக்கிழமை காலை 11-00 மணிக்கு நடைபெறவுள்ள திருமதி லில்லி பொன்னம்மா பொன்னு அவர்களின் நன்றி செலுத்தும் ஆராதனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறவுள்ள மதிய போசனத்திலும் பங்குபற்றுமாறு உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

1 4-93ல் நடைபெற்ற இவரது நல்லடக்க ஆராதனையில் பங்குபற்றிய அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

நன்றி
A. V பொன்னு (கணவர்)
(இளைப்பாறிய ஆசிரியர்)
சாந்தி பொன்னு (மகள்)

'ஜெனவாசம்'
குடத்தனை. (சி-60)

## 2-ம் வருட நினைவலைகள்



### வீரவேங்கை லோறன்ஸ்

வீரப்பிறப்பு: 13-09-1971 வீரமரணம்: 30-04-1991

(30-04-91ல் நீராவியடியில் தற்செயலாக ஏற்பட்ட வெடிவிபத்தில் சகபோராளிகளுடன் வீரச்சாவைத் தழுவிக்கொண்டவர்) இவரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக நாளை 30-04-93 வெள்ளிக்கிழமை காலை 6-15 மணிக்கு யாழ். புனித அடைக்கல அன்னை ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

தமிழீழத்தின் இனப்போரில்
உன்சாவும் இணைந்ததைய்யா
பொன்னீழம் நாளைக்குப் பூப்பூக்கும்
அந்தப் பூப்பூக்க உன்சாவு
தண்ணீர் வார்க்கும்"

பிரிவால் துயருறும்
பாசமுள்ள பெற்றோர்,
உற்றார், உறவினர்கள்,
நண்பர்கள்,

வி. பிரான்சிஸ்
செல். பீற்றரீஸ் லேன்,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (இ-59)

# நாட்டில் குழப்பம் விளைவிக்க எதிர்க்கட்சிகள் முயற்சியாம்

## ஐ. தே. க. குற்றச்சாட்டு

(கொழும்பு)

லலித் அத்துலத்முதலியின் கொலையைத் தொடர்ந்து எதிர்க்கட்சிகள் குழப்பம் விளைவிப்பதை தடுக்கவேண்டும் என்று ஐ. தே. க. தூதுக்குழுவினர் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்காவை வலியுறுத்தியுள்ளனர்.

எதிர்வரும் மாகாணசபைத் தேர்தல்களை சுமுகமாக நடத்துவதற்கான பாதுகாப்பு ஒழுங்குகள் பற்றி பேச்சுவார்த்தை நடத்துவதற்காக ஐ. தே. க. தூதுக்குழுவினர் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்காவை நேற்று முன்தினம் சந்தித்தனர்.

ஐ. தே. க. நாடாளுமன்ற உறுப்பினர்களான சிறிசேன கூரே, ரணில் விக்கிரமசிங்க, கே. எஸ். சொக்ஸி ஆகியோரைக் கொண்ட குழுவினரே ஐ. தே. க. வின் சார்பில் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர்.

பாதுகாப்பு ராஜாங்க அமைச்சின் செயலாளர் ஏயார் சீவ் மார்ஷல் வோல்டர் பெர்னாண்டோ, பொலிஸ் மா அதிபர் ஏர்ணஸ்ட் பெரேரா, பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஐ. ஓ. செனவிரத்ன மற்றும் பாதுகாப்பு அமைச்சின் அதிகாரிகள் ஆகியோர் பாதுகாப்பு பிரிவு தரப்பில் கலந்து கொண்டனர்.

லலித் அத்துலத் முதலியின் கொலையைத் தொடர்ந்து எதிர்க்கட்சிகள் சில குழப்பம் விளைவிப்பதை தடுக்கவே தீர்க்கமான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். தேர்தல் திட்டமிட்டபடி நடைபெறவேண்டும் என்றும் தேர்தலில் போட்டியிடும் அனைத்து கட்சிகளும் தமது பிரச்சார வேலைகளை நடத்தப்படுவதை உறுதிப்படுத்தவேண்டும் என்றும் தூதுக்குழுவினர் அங்கு பிரசன்னமாயிருந்த அதிகாரிகளிடம் வலியுறுத்தியுள்ளனர். (ரி)

## தனிப்பட்டோருக்கு ஆயுதம்

### பாதுகாப்பு அமைச்சு ஆராய்வு

(கொழும்பு)

தனிப்பட்ட நபர்களுக்கு ஆயுதம் வழங்குவது குறித்து பாதுகாப்பு அமைச்சு மிகுந்த எச்சரிக்கையுடன் இருப்பதாக தம்மைச்சந்தித்த ஐ. தே. க. தூதுக்குழுவினரிடம் பாதுகாப்பு அமைச்சு செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்க தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சிகள் தமது வேட்பாளர்களுக்கு ஆயுதங்கள் வழங்கப்படவேண்டும் என்று வேண்டுகோள் விடுத்துள்ளதாகவும் அவர்மேலும் தெரிவித்தார்.

மாகாணசபையில் முன்பு அங்கத்தவர்களாக இருந்த சகல கட்சிகளின் வேட்பாளர்களிடமும் ஆயுதங்கள் உள்ளன எந்தவொரு கட்சியைச் சேர்ந்த புதிய வேட்பாளர்களுக்கும் பாதுகாப்புக்கு ஆயுதங்கள் தேவைப்படுவது அவசியம் எனக் காணப்படும் பட்சத்தில் அவர்களுக்கு ஆயுதங்கள் வைத்திருப்பதற்கான அனுமதி வழங்கப்படும்.

எதிர்க்கட்சி அங்கத்தவர்களிடம் அரச தரப்பு அங்கத்தவர்களிடமுள்ள அதே அளவு ஆயுதங்களே இருக்கின்றன என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ரி-சி)

காரைநகர்

## மணிவாசகர் சபையின் பொன்விழா மலர் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

காரைநகர் மணிவாசகர் சபையின் பொன்விழா மலர் வெளியீட்டுவைபவம் மே மாதம் 2ம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9மணிக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன கலாமண்டபத்தில் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் நடைபெறவுள்ளது.

மகாராஜா ஸ்ரீ சு. து. ஷண்முகநாதக்குருக்கள் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் ஆசியுரையுடன் ஆரம்பமாகும் இந்த வைபத்தில் பொன்விழா மலரைவெளியிட்டு வெளியீட்டுரையை ஆத்மஜோதி நா. முத்தையா வழங்குவார்.

பேராசிரியர் அ. சண்முகதாஸ், ஆய்வுரை செய்கின்றார். சிறப்புரையை காரைநகர் கம்பன்கழக அமைப்பாளர் த. சிவகுமாரன், அகில இலங்கை கம்பன்கழக அமைப்பாளர் இ. ஜெயராஜ் ஆகியோர் நிகழ்த்துவார்கள். (சு-சி)


நெல்லியடியில்

யாழ். New Science Acadamy

ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த சேவை

A/L 94, 95

| | |
|---|---|
| தூய பிரயோக கணிதம் | Mr. வெக்டர் |
| பௌதிகவியல்:- | Mr. சோதிலிங்கம் |
| | Mr. கணேசன் |
| இரசாயனவியல்:- | Mr. சண் |
| | Mr. மணியம் |
| விலங்கியல்:- | Mr. சுபசீலன் |
| | Mr. பாலதாஸ் |
| தாவரவியல்:- | Mr. குணசீலன் |

(கி- 64)



உ

சிவமயம்

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்"

காரைநகர் மணிவாசகர் சபை

பொன்விழா

மலர் வெளியீடு

தலைவர்: சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி J. P. அவர்கள்

காலம்: ஸ்ரீமுக வருஷம் 19 ஆம் நாள் (02-05-1993) ஞாயிற்றுக்கிழமை

இடம்: நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன கலா மண்டபம்

நேரம்: காலை 9-00 மணி

அறிஞர்கள், பண்டிதர்கள், பேராசிரியர்கள் போன்றோரின் நாற்பதுக்கு மேற்பட்ட கட்டுரைகளைக் கொண்ட காரைநகர் மணிவாசகர் சபையின் பொன்விழா மலர் வெளியீடு சைவத்தமிழ் அபிமானிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நிகழ்ச்சிகள்

காலை 9-00 மணி திருவாசகத் திருமுறை ஓதல்
திரு. மு. சுந்தரலிங்கம் அவர்கள்

காலை 9-10 மணி வரவேற்புரை
திரு. செ. தேவராசன் B. A. Dip in Edu. அவர்கள் (தலைவர், காரைநகர் மணிவாசகர் சபை, கொத்தணி அதிபர்)

காலை 9-15 மணி ஆசியுரை
மகாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள் (மாவை ஆதீனம்)
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் (நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குருமகா சந்நிதானம்)

காலை 9-25 மணி (தலைமை உரை)
பண்டிதை, சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, J. P. அவர்கள்

காலை 9-55 மணி பொன்விழா
மலர் வெளியீடும், வெளியீட்டுரையும்
ஆத்மஜோதி தவத்திரு நா. முத்தையா அவர்கள்

முதற்பிரதி பெறுபவர்:
திரு ச. வி. முருகேசு அவர்கள் (S. V. M. ஸ்தாபனம், யாழ்ப்பாணம்)

முற்பகல் 11-00 மணி ஆய்வுரை
பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்கள் (தலைவர் தமிழ்த்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

சிறப்புரை
திரு. த. சிவகுமாரன் அவர்கள் (ஆசிரியர், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி, அமைப்பாளர், காரைநகர் கம்பன் கழகம்)
திரு. இ. ஜெயராஜ் அவர்கள் (அமைப்பாளர், அகில இலங்கைக் கம்பன் கழகம்)

நிறைவுரை
பண்டிதர் மு. சு. வேலாயுதபிள்ளை

பிற்பகல் 12-30 மணி

நன்றியுரை
செயலாளர், (காரைநகர் மணிவாசகர் சபை)

சிவ சிவ சிவ

து. நாகேந்திரம், ஆ. செந்தில்நாதன்
இணைச்செயலாளர்கள்

28-04-1993
காரைநகர் மணிவாசகர்சபை (கி 63)


## ஆட்சேபம்

(பண்டத்தரிப்பு)

சங்கானை தபால் அலுவலகத்தில் இராணுவநடவடிக்கை காரணமாக தற்காலிகமாக இயங்கிவந்த இளவாலை உபதபாலகம் மூடப்பட்டதற்கு இடம்பெயர்ந்த இளவாலைப் பகுதி மக்கள் பலத்த ஆட்சேபம் தெரிவித்துள்ளனர். (72)

## போட்டியின்றி தெரிவு

(கொழும்புத்துறை)

யாழ் வர்த்தக ஊழியர் சங்கத்தின் தலைவராக திரு. என். இராமச்சந்திரன் மீண்டும் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

தொழிற்சங்க வாதியான இவர் ஓர் சிறந்த சமய சமூக சேவையாளருமாவார் என்பது குறிப்பிடத்தக்கது. (154)

## இராசி பலன்

29-04-1993

வியாழக்கிழமை

(தமிழுக்கு சித்திரை 16)

அட்டமி பி. இ. 1-38 வரை பூசம் பி. ப 4-51வரை அமிர்த சித்தயோகம் இராகுகாலம் பகல் 1-28 முதல் 2-58 வரை சுபநேரம் காலை 7-28 முதல் 8-58 வரை.

மேடம்: பிடிவாதம், மனக் கொந்தளிப்பு, காரியத்தடை.

இடபம்: கடமையுணர்வு, தொழில் மேன்மை, பணவரவு

மிதுனம்: அன்னியர் பகை பழைய சிந்தனை, சகோதர வெறுப்பு.

கடகம்: பிறர் நன்மை, குடும்ப மகிழ்ச்சி, தலைமை ஸ்தானம்.

சிம்மம்! சிலர் ஏளனம், விரக்தி மனோபாவம், அலைச்சல்.

கன்னி: அளவுக்கு மீறிய ஆசை, புரட்சியான செயல், காரியசித்தி.

துலாம்: தொழில் லாபம், ஆடம்பர செலவு, பயணம்.

விருச்சிகம்: அதிகாரம், கருத்து வேற்றுமை, குடும்ப பிரிவு.

தனுசு: தொழில் சங்கடம், குழம்பிய நிலை, பணக்கஸ்டம்.

மகரம்: எதிர்பார்த்த தகவல், மனமகிழ்ச்சி, உறவினர் வருகை.

கும்பம். கௌரவம், புதிய உறவு, மாமனார் உதவி

மீனம்: மனவாட்டம், தொழில் பாதிப்பு, அன்னிய வாசம்.

— ஜோஸ்யர்


வரவேற்புபசார விழா

வைத்தீஸ்வராக் கல்லூரியின் அதிபரும், வண். மேற்கு கொத்தணி அதிபருமான

திரு. T. சந்தோஷம்

அவர்களைக் கௌரவிக்கும் முகமாக

பழைய மாணவர் மன்றம் நடாத்தும்

வரவேற்புபசார விழா

காலம்: 30-4-93 வெள்ளிக்கிழமை பி.ப. 4-30

இடம்: கல்லூரி மண்டபம்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பழைய மாணவர் மன்றம்
யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி.

(கி- 6)



உ

சிவமயம்

யாழ். வண்ணை

ஸ்ரீ காமாட்சியம்பாள் ஆலயம்

9ஆம் நாள் பூந்தண்டிகை

திருவிழா

காலம்: 29-04-1993 வியாழக்கிழமை

விசேட தவில்—நாதஸ்வரக் கச்சேரிகள்

★ அ. சிவதாசன் குழுவினர்
★ எஸ். எஸ். சிதம்பரநாதன்
★ என். கே. பத்மநாதன் குழுவினர்
★ கே. எம். பஞ்சாபிகேசன் குழுவினர்
★ வி. கே. கானமூர்த்தி—பஞ்சமூர்த்தி குழுவினர்
★ காரைநகர் கணேஷ்
★ கே. ஆர். புண்ணியமூர்த்தி
★ கே. நித்தியானந்தன்
★ ரி. உதயசங்கர்
★ எஸ். சொர்ணலிங்கம்
★ கே. பாலசுவந்திரன்

ஸ்ரீ வேலும் மயிலும்ஸ்
(பான்ஸி குட்ஸ்)
இல 54, நியூமார்க்கட், (உட்புறம்)
யாழ்ப்பாணம்.

(ஏ-3093)

## லலித்தின் இறுதிக் கிரியையில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## பொலிஸ் நிலையம் சேதம்

ரூபவாஹினி, ஒலிபரப்பு நிலையத்திற்கு மிக அதிகமான பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்ததால் அவற்றைத் தாக்கமுடியாத மக்கள் கூட்டம் பொலிஸ் நிலையமொன்றை பலமாகத் தாக்கியது. பொல்லுகள், தடிகள் உட்பட கையில் கிடைத்த பொருட்களால் பொலிஸ் நிலையத்தின் பெரும் பகுதியைத் தாக்கி மோசமாகச் சேதப்படுத்தினர். தாக்குதல் நடத்தியோரில் பெருமளவினர் பொலிஸ் நிலையத்தினுள் புகுந்து அங்கிருந்த தஸ்தாவேஜுகளைக் கிழித்தெறிந்ததாக ஏஜென்ஸி செய்திகள் கூறின. இங்கு பெரும் மோதல் வெடித்ததாம்.

## மூன்று மணி நேர ஊர்வலம்

இறுதி ஊர்வலம் கொள்ளுப்பிட்டியிலிருந்து கனத்தை வரை செல்ல மூன்று மணி நேரம் பிடித்தது. இதனால் போக்குவரத்துத் தடைப்பட்டது. சன நெருக்கமும் இதற்கு ஒரு காரணமாகும். அரசுக்கு எதிரான உணர்வுகளின் தீவிரம் இந்த ஊர்வலத்தில் தெரிந்தது. சில இடங்களில் போடப்பட்ட தடைகளையும் நீக்கி மக்கள் ஊர்வலத்தைப் பார்த்ததோடு, பலர் மரங்கள் மீதும் ஏறி நின்றும் கனத்தை மயானத்தில் இடம்பெற்ற இறுதிக் கிரியைகளைப் பார்த்தனர். மயானத்தின் மதில்கள் பெருமளவு சேதமடைந்தன.

## அமைச்சர் வீடு மீது தாக்கு

இறுதி ஊர்வலம் சென்றுகொண்டிருந்த வழியில் இருந்த முக்கிய அமைச்சர் வீடு வரை ஊர்வலம் ஓரளவு அமைதியாக சென்றது. அமைச்சரின் வீட்டருகில் ஊர்வலம் வந்தபோது வீட்டின் மீது பலத்த தாக்குதல் இடம்பெற்றது. இதையடுத்தே வன்முறை வெடித்தது. வன்முறையாளர்களின் தாக்குதலுக்கு இலக்கான அமைச்சரின் வீடு பலத்த சேதமடைந்தது. ஆனால் அங்கு அவ்வேளை அமைச்சர் இருக்கவில்லையாம்.

## பிக்குவின் வீடு தீக்கிரை

அமைச்சரின் வீட்டை தாக்கிய கூட்டம் பின் அவ்வீதியில் இருந்த பொலிஸ்நிலையம் ஒன்றை தாக்கியது. எனினும் தடுக்கப்பட்டதாம் இதையடுத்து அப்பால் சென்றோர் அரசின் தீவிர ஆதரவாளரான பௌத்த பிக்கு ஒருவரின் வீட்டை தீக்கிரையாக்கினர். அங்கு காவலுக்கு நின்ற பொலிஸாரும், ஆர்ப்பாட்டக்காரரும் நேருக்குநேர் மோதிக்கொண்டதாக நேரில் பார்த்தோர் தெரிவித்தனர். பொலிஸ் வண்டி ஒன்றும் தீவைக்கப்பட்டது.

## அரசு தரப்பினர் வரவில்லை

லலித்தின் இறுதிச் சடங்கில் பெரும் கலவரம் வெடிக்குமென எதிர்பார்க்கப்பட்டதால் அமைச்சர்களோ, அரசு தரப்பினரோ, அரசு அதிகாரிகளோ ஊர்வலத்திலோ அல்லது கனத்தை மயானத்தில் நடந்த இறுதிச்சடங்கிலோ கலந்து கொள்ளவில்லை. இவர்களை இவற்றில் கலந்து கொள்ள புலனாய்வுத் துறையினரும் அனுமதிக்கவில்லையாம். தமது சொந்தப் பாதுகாப்பிற்காகவே அரசு தரப்பினர் கலந்து கொள்ளவில்லையாம். எனினும் வழியில் காணப்பட்ட அரசு தரப்பினர் வீடுகள் எல்லாம் தாக்கப்பட்டன.

## மயானத்தில் இராணுவம் குவிப்பு

லலித்தின் இறுதி ஊர்வலம் வீதி வழியாக வந்து கொண்டிருக்கையில் ஏற்பட்ட பெரும் கலவரத்தையும் குழப்பத்தையும் அடுத்து கனத்தை மயானத்தில் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் அவசர அவசரமாக அகற்றப்பட்டு அவ்விடத்திற்கு ஆயிரக்கணக்கான இராணுவத்தினர் கொண்டு வந்து குவிக்கப்பட்டனர். இவர்கள் கனத்தை மயானத்தில் பெரும் கலவரம் வெடிப்பதை ஓரளவு தடுத்ததாக சில செய்தியாளர்கள் தெரிவித்தனர். எனினும் அங்கும் ஓரளவு கலவரம் வெடிக்கவேசெய்தது.

## பொலிஸ் சூடு; ஒருவர் பலி

கனத்தை மயானத்திற்கு அருகேயிருந்த பொலிஸ்நிலையம் மீது மக்கள் கற்களை வீசினர். அங்கே மக்கள் மீது கண்ணீர் புகைக்குண்டு வீசப்பட்டதோடு துப்பாக்கி பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டது. இதனால் ஒருவர் அவ்விடத்திலே பலியானார். 30 பேர் படுகாயமடைந்தனர். இதனையடுத்து அங்கு நின்ற அதிரடிப்படையினருடனும் பொலிஸாருடனும் பொது மக்கள் மூர்க்கத்தனமாக மோதிக்கொண்டனர். இதனால் பொலிஸார் பலர் படுகாயமடைந்தனர்.

## மயானத்தில் 'போர் வலயம்'

கனத்தை மயானத்தில் ஒரு புறம் கடும் மோதலும் மறுபுறத்தில் லலித்தின் இறுதிக் கிரியைக்கான சமயச்சடங்குகளும் மற்றொருபுறத்தில் கண்ணீர்ப்புகைக்குண்டு வீச்சும் அமளியாக இடம்பெற்றுக்கொண்டிருந்தபோது அந்த சூழல் ஓர் 'போர்வலயமாகவே' காட்சியளித்ததாக அவ்விடத்தில் நின்ற பி. பி. ஸி. நிருபர் நேற்றிரவு கூறினார். இந்த அமளியின் மத்தியில் மாலை 6-05 மணியளவில் லலித்தின் சடலம் வைக்கப்பட்ட சிதைக்கு தீ மூட்டப்பட்டது. இதை எரியத் தொடங்கியதும் மக்களின் அலறல் வானைப் பிளந்தது.

## கலவரத்தை தடுத்த மழை

கனத்தை மயானத்தில் வெடித்த கலவரம் எங்கும் பரவி மோசமான விளைவுகளை ஏற்படுத்துமோ என்றதொரு நிலையில், மாலை பெய்த சித்திரைப் பருவ மழை கலவரம் பரவாமல் அவ்விடத்திலேயே தடுத்துவிட்டது. பெருமழை சில மணி நேரம் தொடர்ந்தும் பெய்ததால் கலவரம் பெருமளவு குறைந்ததுடன் மக்கள் கூட்டமும் ஓரளவு கலைந்துவிட்டது. முற்றாகக் கலவரம் தணிய இரவு 7-15 மணி சென்றதாக ரூபவாஹினி தனது செய்தியில் கூறியது.

## கலகத்தை அடக்க ஊரடங்கு

லலித்தின் இறுதி ஊர்வலத்திலும், கனத்தை மயானத்திலும் இடம்பெற்ற பெரும் கலவரங்களையடுத்து கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டது. இந்த ஊரடங்கு நேற்றிரவு 8 மணி முதல் இன்று அதிகாலை 4 மணிவரை அமுலில் இருக்குமெனவும் கலவரக்காரர் மீண்டும் கூடுவதை தடுக்கவே ஊரடங்கு உத்தரவு அவசரகாலச் சட்டவிதிகளின் கீழ் ஜனாதிபதி பிரேமாவின் அவசர உத்தரவுக்கமைய அமுல்படுத்தப்பட்டதாம். நேற்றிரவு முழுவதும் நகரின் சகல பகுதிகளையும் முப்படைகளும் முற்றுகையிட்டிருந்தனர்.

## வீதிகளில் கவச வாகனம்

பிந்திக்கிடைத்த செய்திகளின்படி கொழும்பு நகரில் ஊரடங்கு அமுலில் உள்ளதால் நகர வீதிகளில் கவசவாகனங்களும், பீரங்கி வண்டிகளும் சுற்றித்திரிவதாகவும் முப்படைகளும் பெருமளவில் கால்நடையாக ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதுடன் இடைக்கிடை துப்பாக்கிச் சூட்டு சத்தமும் கேட்பதாக தெரிவிக்கப்பட்டது. கொழும்பு நகரமே ஒருவித பதற்றத்தில் காணப்படுகிறதாம். (சி-கே-சு.)

## இந்திய இராணுவம் அதிரடி

### 1000 பொலிசார் சிறைபிடிப்பு

### காஷ்மீரில் நேற்றுச் சம்பவம்

(ஸ்ரீநகர்)

காஷ்மீர் தலைநகரின் பொலிஸ் தலைமையகத்தினுள் திடீர் அதிரடி நடவடிக்கையாகப் புகுந்த இந்திய இராணுவம் பொலிஸ் தலைமையகத்தைத் தம்வசப்படுத்தியதுடன், 1,000 பொலிஸாரைச் சிறைப்படுத்தினர்.

ஸ்ரீநகரில் கடந்த 6 நாட்களாக, அரசுக்கு எதிராகப் போராட்டம் நடத்தி வந்து, பொலிஸ் தலைமையகத்தை முற்றுகைக்குள் வைத்திருந்த பொலிஸாரின் நடவடிக்கையை ஒடுக்கும் வகையில் நேற்று அதிகாலை இந்திய இராணுவம் திடீரெனப் பொலிஸ் தலைமையகத்தினுள் புகுந்து, உள்ளேயிருந்த 1,000 பொலிஸாரைக் கைது செய்ததுடன், பொலிஸ் தலைமையகத்தையும் தம் வசப்படுத்தினர்.

இத்தலைமையகத்தில் பொலிசாரால் பிணை வைக்கப்பட்டிருந்த பொலிஸ் ஜெனரல் பல்விந்தர் சிங் பேடியும் இராணுவத்தால் மீட்கப்பட்டார். இந் நடவடிக்கையின்போது இரத்தம் எதுவும் சிந்தப்படவில்லையாம். (சி)

## பிரபாவை ஒப்படைக்க இந்தியா கோரும்?

(புதுடில்லி)

ராஜீவ் கொலை தொடர்பாக விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரனை இந்தியாவிடம் ஒப்படைக்குமாறு கோருவதற்கு ஏற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக இந்திய உள்துறை அமைச்சர் திரு எஸ். பி. சவான் கூறியுள்ளார்.

'தடா' சட்டத்தை மேலும் இரு வருடங்களுக்கு நீடிப்பது தொடர்பான விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் இவ்வாறு கூறினார். (ஜி)

## நாட்டின் தலைவராக லலித் வந்திருப்பார்

(கொழும்பு)

ஒருநாளைக்கு திரு. அத்துலத்முதலி நாட்டின் தலைமைப் பதவியை ஏற்று பல மாற்றங்களை கொண்டுவருவார் என மக்கள் எதிர்பார்த்தனர். ஆனால் இந்த படுகொலை அதற்குமுற்றுப்புள்ளி வைத்துவிட்டது என பி.பி.ஸி நிருபருக்கு ஊர்வல மக்கள் தெரிவித்தனர்.

ஜனாதிபதி பிரேமதாஸா லலித்தின் படுகொலை போன்ற சம்பவங்களையும் வன்முறையையும் அனுமதிப்பது நாட்டிற்கு பெரும் இழப்பாகும். இந்தக் கொலை மக்களை வெகுவாக பாதித்துள்ளது தற்போது நாட்டில் அமைதி ஒழுங்கு இன்றி ஜனநாயகத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கும் நிலைக்கு நாடு தள்ளப்பட்டுள்ளது என்றும் பி. பி. சி. நிருபருக்கு பலர் தெரிவித்தனர். (கே-கி)

## லலித்துக்கு அஞ்சலி; ஜனாதிபதி செயலகம் மறுப்பு

(கொழும்பு)

காலஞ்சென்ற லலித் அத்துலத் முதலிக்கு இறுதி மரியாதை செலுத்த ஜனாதிபதிக்கு அனுமதி மறுக்கப்பட்டது என்று வெளிவந்த செய்தியை ஜனாதிபதி செயலகம் திட்டவட்டமாக மறுத்துள்ளது.

ஜனாதிபதி பிரேமதாஸாவின் வேண்டுகோளை லலித் அத்துலத் முதலியின் குடும்பம் நிராகரித்துள்ளது என்று ஏ.எப்.பி. நிறுவனம் முதலில் செய்தி வெளியிட்டிருந்தது.

ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசாவோ முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர் ஜயவர்த்தனாவோ, அல்லது ஜனாதிபதியின் சார்பில் எவருமோ அத்துலத் முதலியின் குடும்பத்தினரிடம் இப்படியான எந்தவிதமான வேண்டுகோளையும் விடுக்கவில்லையென்று ஜனாதிபதி செயலகம் மேலும் தெரிவித்துள்ளது. (சு-கி)

## நில்கிரி இன்று வருகிறது

(யாழ்ப்பாணம்)

நில்கிரி கப்பல் மண்ணெண்ணெய் பரல்களுடன் இன்று பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடையுமெனஎதிர்பார்க்கப்படுகிறது. (159-கி)

## பட்டதாரி மாணவர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

தேசிய கல்வி நிறுவகம் பட்டப்பின் கல்வி டிப்ளோமா பயிற்சி நெறி பரீட்சைக்கு இதுவரை தோற்றாத பட்டதாரி மாணவர்களுக்கு இன்றும், நாளையும் யாழ். கல்வித் திணைக்கள அலுவலகத்தில் நடைபெறும் நேர்முகப் பரீட்சைக்கு உரிய ஆவணங்களுடன் சமுகமளிக்குமாறும், இநேர்முகப் பரீட்சை நாளையுடன் பூர்த்தியடைகிறதென்றும் பின்னர் இச்சந்தர்ப்பம் இக்கல்வியாண்டில் வழங்கப்படமாட்டாதென்றும், வடமாநில கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (159-கி)

### ஊறணி கடலில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை ஆனையிறவுமுகாமிலிருந்து கிளாலிப் பகுதியை நோக்கி அகோர ஷெல் தாக்குதல் இடம் பெற்றது ஆனையிறவு முகாமை அண்டிய பகுதிகளில் துப்பாக்கி வேட்டு சத்தங்களும் கேட்டவண்ணமிருந்தது. (170-கி)

### பூநகரி ஊடாக

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பிலுள்ள ஐ. நா. தூதரக உயர் அதிகாரி டாக்டர் பீற்றர் நிக்கலஸ் இப்பாதை திறப்பது சம்பந்தமாக விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்கள் நடத்துவதற்கு வெகு விரைவில் யாழ். வர இருப்பதாகவும், இது குறித்துப் புலிகளுக்கும், அரசுக்கும் ஏற்கனவே இணக்கம் ஏற்பட்டுள்ளதாகவும் திரு. அசோக்குமார் தெரிவித்தார். (கே)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் நிறுவனத்தாரால், யாழ்ப்பாணம் கே.கே.எஸ். வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில், 1993-ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 29-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post Office, Srilanka under licence Number B/10836/B